**கல்முனை மாநகர சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி மாநகர முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கல்முனை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) 2016 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையினால் JCB இயந்திரம் வாடகைக்கு பெற்றுக் கொண்டதற்காக பெறவேண்டிய ரூபா 93,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வாடகை வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாகவும் நடைமுறை சொத்தாகவும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும் | பல அறிவுறுத்தல்கள், நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்தும் அதற்கான தொகை கிடைக்கப் பெறவில்லை. அதனால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| (ii) மாநகர சபையினால் 2011 – 2015 காலப்பகுதியில் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கைக்காக காரைதீவு பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ரூபா 3,023,329 தொகை நிலுவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஊரிய ஆவணங்கள் மற்றும் உறுதிப்படுத்தல்களைப் பெற்று செலுத்தப்படவேண்டிய செலவினத்தினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | இவ்விடயம் தொடர்பாக காரைதீவு பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) மாநகர சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்ற கல்முனை இஸ்லாமபாத் மாநகர ஆயுர்வேத வைத்திய சாலையின் 31 டிசம்பர் 2018 இல் இருப்பில் காணப்பட்ட ரூபா163,333 பெறுமதியான ஆயுர்வேத மருத்துப் | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் இருப்பு பெறுமதியினை உரிய காலத்தில் நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக்கொள்ள | எதிர்வரும் காலங்களில் நிவர்த்தி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்களின் இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கவேண்டும். | |
| (iv) | 2018 காலப்பகுதிக்கான துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு குத்தகையில் கல்முனை பிரிவு வாகனத்திற்கான அறவிட வேண்டிய நிலுவை ரூபா452,250 தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | அறவிடவேண்டிய வருமானத்தினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | மீளாய்வாண்டிற்கான வீத வரிகள் பேரேட்டின் படி ரூபா 12,348,790 தொகையாகக் காணப்பட்டிருந்தும் வருமானச் செலவுக்கணக்கில் ரூபா9,222,054 தொகையாகக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 3,126,736 தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் வீதவரியின் உண்மை பெறுமதியினை நிதிக்கூற்றில் காட்டப்படவேண்டும் | அறவிடப்படவேண்டிய வீதவரி தொகையினை அறவிடுவதற்குரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (vi) | மீளாய்வாண்டிற்கான வாடகை பேரேட்டின்படி ரூபா 15,592,099 தொகையாகக் காணப்பட்டிருந்தும் வருமானச் செலவுக்கணக்கில் ரூபா15,261,361 தொகையாகக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா330,738 தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் வாடகையின் பேரேட்டு மீதியினை நிதிக்கூற்றில் வெளிப்படுத்தல் வேண்டும் | குறித்த தொகையினை அறவிடப்படுவதற்குரிய சட்டநடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 விடயங்கள் நிதிக்கூற்றின்படி மீதிகளும் அவற்றின் பதிவேட்டின்படி மீதிகளுக்கும் இடையில் ரூபா.16,751,454 தொகையினால் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | வேறுபாட்டினை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | 1987ம் ஆண்டிலிருந்து நிலுவை இடம்பெறுவதனாலும், இவை தொடர்பான ஆதாரங்கள் இல்லாமையினாலும் குறித்த விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 142,933,051 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, வைப்பு இணக்கக் கூற்று மற்றும் காலப்பகுப்பாய்வு போன்ற | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் | 2014க்கு முன் உள்ள விபரங்கள் தெளிவாக இல்லாத காரணத்தினால் இவைகளை சரியாக இனங்காண முடியாதுள்ளது. குறித்த |

| | | |
|---|---|---|
| சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தொகையை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ)மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், பிரிவு 218 | நிர்வாகம் தொடர்பாக ஆணையாளரினால் ஒவ்வொரு நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டிய விபரமான அறிக்கை மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் பிரகாரம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் தயாரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ)நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வோர் உள்ளூராட்சி சபைகளும் நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி க்கணக்கொன்றை ஆரம்பித்து சேவைக் கட்டணங்களும் தண்டப்பணங்களும் மேற்படி கணக்கில் வைப்பிலிடவேண்டுமென அறிவுறுத்தப் பட்டிருந்தும் மாநகர சபையானது நகர அபிவிருத்தி எனும் பெயரில் வங்கி கணக்கொன்றை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் இக்கணக்குகள் திறப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். |
| (இ)இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 32,710,231 தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப்பிரமாணத் திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 4,843,893 ஆக

இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 13,431,998 தொகையாக ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

---------------------------

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

--------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் ---------------- | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 11,100 | 12,349 | 9,222 | 94,693 | 11,100 | 12,174 | 11,592 | 91,567 |
| வாடகைகள் | 19,980 | 15,592 | 15,261 | 39,123 | 19,980 | 16,637 | 15,621 | 38,792 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 9,705 | 8,491 | 8,491 | -- | 9,705 | 7,254 | 7,254 | -- |
| ஏனைய வருமானம் | 45,275 | 34,435 | 34,435 | -- | 43,255 | 24,295 | 24,295 | -- |
| | 86,060 | 70,867 | 67,409 | 133,816 | 84,040 | 60,360 | 58,762 | 130,359 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

-------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 201.22 மில்லியன் தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 67.41 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 33% ஆக காணப்பட்டிருந்தது. | சபையின் பிரதான வருமானங்களின் சேகரிப்பினை உச்சப்படுத்துவதற்கான தீர்மானத்தினை மேற்கொண்டு சேகரிப்பு வீதத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

---------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 47,900 அசைவற்ற ஆதனம் மற்றும் காணிகளில் ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய சோலைவரி ரூபா 91.56 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

### 2.2.4 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 1987 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் பொதுச்சந்தைக் குத்தகை ரூபா 12,314,393, இறைச்சிக் கடை குத்தகை ரூபா 7,661,912, கடை வாடகை ரூபா 13,657,443 என்பவற்றை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | அறவீடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 1996 முதல் நிலுவையாகக் காணப்பட்டு வரும் துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன பாதுகாப்பு குத்தகை ரூபா 3,394,613 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | அறவீடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) மாநகர சபைக்குச் சொந்தமான பொதுச்சந்தையில் 503 கடைகளில் 64 கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து நிலுவை வாடகை ரூபா 5,130,143 தொகை 7 வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | அறவீடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்படி கடைகள் திருத்தம் செய்ய வேண்டியுள்ளதால் நிலுவை அறவீடு செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. |
| (ஈ) பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 10,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும், மாநகர சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது 1980 ஆம் ஆண்டு தொடக்கம் மாதாந்தம் ரூபா 300 தொடக்கம் ரூபா 2,500 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 60 மில்லியன் தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது. | சபையின் வருமான இழப்பினை தவிர்த்து நடைமுறை கேள்வினை அடிப்படையாக கொண்டு வாடகையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019இல் இருந்து வாடகை அதிகரிக்கப்பட்டுள்ளது |
| (உ) 2018 ஆம் ஆண்டில் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் ரூபா 9,555,049 மொத்தத் தொகையில் குத்தகைக்காக வழங்கப்பட்ட 74 எண்ணிக்கையான கடைகள், பொதுச் | கடைகள், பொதுச் சந்தைகள் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | எதிர்வரும் காலங்களில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படும். |

| | | |
|---|---|---|
| சந்தைகள் மற்றும் வாகனத் தரிப்பிடங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் சபையினால் செய்யப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் | |

**2.2.5 முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிழக்கு மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க முத்திரை தீர்வை மாற்றல்கள் பிரிவு 03 இற்கு அமைய வருடாந்தம் முத்திரைத் தீர்வை அறவிடப்படவேண்டிய போதிலும், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்காக கல்முனை மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் அறவிடப்பட்ட முத்திரைத் தீர்வைகள் மற்றும் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வைகளை மாநகர சபையினால் கணக்கிட்டு உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018ம் ஆண்டுக்குரிய முத்திரைத் தீர்வை விபரங்களை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறுவதில் சிரமம் காணப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 42 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் அவ்விடயங்களிற்கான உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும். | 272:1 1: a, b, c, e என்பன தொடர்பான அதிகாரம் 2013 December 31 ம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாணசபையில் கையேற்கப்பட்டுள்ளது.g, h, i மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட உப விதிகள் மாநகர சபையால் பயன்படுத்தப்படுகின்றது. |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி செயற்பட வேண்டும். | இவ் உபவிதிகளுக்கு அமைய இவ்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இவ்விடயம் மேற்கொள்ளப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | அலுவலகக் கட்டிடம், பொதுநூல் நிலையம், பொதுச்சந்தை, பொது விளையாட்டு மைதானம், வாகனத் தரிப்பிடம், பசளை மீள் சுழற்சி நிலையம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிமை மாற்றம் தொடர்பாக பிரதேச செயலகம் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் பொருள் கணிப்பீட்டுச் சபையால் சுட்டிக்காட்டப்பட்ட, காணாமல் போன 8,102 நூல் நிலையப் புத்தகங்கள் மற்றும் கழிக்கப்படவேண்டிய 1,205 புத்தகங்கள் தொடர்பாக பொறுப்பான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை | உரிய காலத்தில் சீராக்கம் செய்யப்பட்டு கிரயப் பெறுமதியானது நிலையான சொத்துக்களில் பதிவழிக்கப்பட வேண்டுவதுடன் காணாமல் போன புத்தகங்கள | எதிர்வரும் வருடத்தில் கழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல். | |
| (இ) | மாநகர சபையில் பயன்படுத்தப்படும் 38 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மாநகர சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபையில் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மாநகர சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும். | இவை தொடர்பாக விபரங்கள் திரட்டப்படுகின்றன. |
| (ஈ) | விண்ணப்பதாரிகளினால் கட்டிட நிர்மாணிப்பு அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரால் முறையாக பரிசீலனை செய்யப்படாது கையேற்று திட்டமிடல் குழுவிற்கு சமர்பித்துள்மையினால் திட்டமிடல் குழுவினால் 2018 ஆம் ஆண்டில் 50 வீதத்திற்கும் அதிகமான விண்ணப்பங்களிற்கான அனுமதி நிராகரிக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக விண்ணப்பதாரிகள் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. | விண்ணப்பதாரிகளினால் கட்டிட நிர்மாணிப்பு அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களை விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரால் முறையாக பரிசீலனை செய்யப்படல் வேண்டும். | இவ் விடயம் தொடர்பாக உரிய விடயஉத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல் செய்யப்படும். |
| (உ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடித இல. 03/2017 இன் பிரகாரம், அலுவலர்களது உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை உறுதிப்படுத்துவதற்கு விரலடையாளப் பதிவு இயந்திரங்களை பயன்படுத்த வேண்டிய போதிலும், மாநகர சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்களது வரவினை உறுதிப்படுத்த விரலடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாநகர சபையின் பதவி நிலை உத்தியோகத்தர்களது வரவினை உறுதிப்படுத்த விரலடையாள இயந்திரம் பயன்படுத்தல் வேண்டும். | 2019யூன் மாதத்திலிருந்து சகல உத்தியோகத்தர்களும் கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பதவி வெற்றிடங்கள் 43 நிரப்பப்படாது காணப்பட்டன. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை | கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். |

எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் 02 பதவி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் 02 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை ரூபா 99,695 தொகை தொடர்பில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணையாளர்களாக ஒப்பமிட்ட வர்களிடமிருந்து அறவீடு செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | *பதவி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பிணையாளர்களாக ஒப்பமிட்டவர்களிடமிருந்து அறவீடு செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>*ஓய்வு பெற்றவர்களின் நிலுவைகள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்தை தொடர்பு கொண்டு நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையின் சோலைவரியை அறவிடுவதற்காக 2014ஆம் ஆண்டு தொடக்கம் 2018 வரை 04 நிரந்தர உத்தியோகத்தர்கள் மற்றும் 04 தற்காலிக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு, 04 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ள போதிலும், சோலைவரி அறவிடுவது தொடர்பாக நாளொன்றுக்கு அறவிடப்பட வேண்டிய இழிவுத் தொகை, நாளொன்றுக்கு வழங்கவேண்டிய சோலைவரி அறிவித்தல்களின் எண்ணிக்கை போன்ற கடமைகள் முறையாக ஏற்படுத்தப்படாமையால், கடமை நேரத்தில் குறித்த உத்தியோகத்தர்களினால் சோலைவரி அறிவித்தல் வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை, கடமையாற்றிய நேரம் மற்றும் உண்மையாக செய்து முடிக்கப்பட்ட வேலை என்பன பற்றிய சான்றுகளை பெறமுடியாதுள்ளது. | சிறந்த முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தி வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 13 மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக திருத்தப்படாத நிலையில் காணப்பட்டிருந்தும் அவற்றை திருத்துவதற்கும் மேலும் பாவிக்கமுடியாத நிலையில் உள்ள 23 இயந்திரங்களும் வாகனங்கள் தொடர்பில் சபையால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது அழித்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சபையின் அனுமதியை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.5.2 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) தீயணைப்புப் படைப்பிரிவின் பாதுகாப்பு உபகரணங்கள், தீயணைப்பு கருவிகள் மற்றும் நீர்குழாய் பொருத்துக்கள் என்பன இரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக திருத்தப்படாது மக்களுக்கு குறித்த நேரத்தில் சேவையை வழங்கமுடியாதுள்ள நிலைமையில் காணப்பட்டிருந்தது. | மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட மக்களின் பொது நலனை உச்சப்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப உரிய காலத்தில் சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டில் இவ்விடயம் சீர்செய்யப்படும். |
| (ஆ) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிதியளிப்பின் கீழ் மாநகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்தில் சிறுவர் கடற்கரைப் பூங்கா முறையே ரூபா 26,780,072 மற்றும் ரூபா 8,267,830 செலவில் அமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இவை சபையினால் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுவதுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் பொருட்கள் பாதுகாப்பற்ற முறையிலும் சேதமாக்கப்பட்டும் மாடுகளின் நடமாட்டமுள்ளதாகவும் காணப்பட்டிருந்தன. | மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட மக்களின் பொது நலனை உச்சப்படுத்தும் நோக்கத்திற்கு ஏற்ப சிறுவர் கடற்கரைப் பூங்காவினை பயன்படுத்தப்பட உரிய நடவடிக்கை எடுப்பதுடன் அதில் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் மற்றும் பொருட்கள் பாதுகாக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் இவ்விடயம் சீர்செய்யப்படும். |

### 3.6 பெறுகை

#### பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை வழிகாட்டியினை பின்பற்றி சபையின் தேவைகளுக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். | எதிர்வரும் காலத்தில் பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | எதிர்வரும் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அலுவலகத்தின் அமைவிடத்தைக் காட்டும் குறிகாட்டிப் பலகையை தயாரித்து பொருத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 123,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்டோபர் 18 ஆம் திகதி வரை குறித்த பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த பலகைகள் பொருத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த சதுக்கத்தின் கிழக்குப் பக்கமாகவுள்ள சந்தாங்கேணி மைதானத்தில் பாரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதன்போது மைதானத்தை சீர்செய்வதற்காக பாரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டது. அவ்வியந்திரங்களைப் பாவிப்பதற்காக குறித்த பெயர்ப்பலகை மீளப்பொருத்தித்தரப்படும் என்ற அடிப்படையில் அகற்றப்பட்டது. ஆனால் இதுவரை பொருத்தப்படவில்லை. மேலும் குறித்த குறிகாட்டிப்பலகை எங்கே வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவில்லை எனவே அதனைக் கண்டுபிடித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | இறைச்சிக் கடை குத்தகைப் பிணைப்பணம் ரூபா 544,154 பெறுமதியான 06 காசோலைகள் 2012 ஆம் ஆண்டு வங்கியில் வைப்புச்செய்யப்பட்டபின் வங்கியால் மறுக்கப்பட்ட போதிலும், இதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் இது தொடர்பாக எதுவித நடவடிக்கை எடுக்காதிருந்த போதிலும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக போதிய ஆவணம் இல்லாமல் உள்ளது. |
| (இ) | அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதிகள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாமல் ரூபா 3 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கணக்கிலும் | வழங்கப்பட்ட நிதிகள் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண அபிவிருத்தி வேலைகளுக்காக எதிர்காலத்தில் நிதி தேவைப்படும்போது நிலையான வைப்புக் கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெற்று பயன்படுத்த நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ரூபா 2,468,590 தொகை நடைமுறைக்கணக்கிலும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | | மேற்கொள்ளப்படும். |
| (ஈ) மாநகர முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட 2014 திசெம்பர் தொடக்கம் 2015 பெப்ரவரி வரையான மூன்று மாதங்களுக்காக ரூபா 13,011 தொகையான கையடக்கத் தொலைபேசி கட்டணப் பட்டியல்கள் 2015 ஆம் ஆண்டில் இருதடவைகள் செலுத்தப்பட்டுள்ள போதிலும், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவிடப்படல் வேண்டும் | மேற்படி விடயம் தொடர்பில் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை மீளச்செலுத்துமாறு முன்னால் முதல்வருக்கு பதிவுத்தபால் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) மாநகர சபை நிதியைப் பயன்படுத்தி ரூபா 124,969 தொகைக்கு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2015 யூன் 30 ஆந் திகதி கல்முனை அல் அமீன் பாடசாலைக்கு ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், 2017 செப்டெம்பர் 25 ஆந் திகதி அப்பாடசாலையின் அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துமூலக் கூற்றின்படி அப்பொருட்கள அப்பாடசாலைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பாடசாலைக்கு ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்குறிப்பிட்ட பொருட்களை உரிய பாடசாலை அதிபர் பெற்றுக்கொண்டமைக்கான சான்றை இரு வாரகாலத்துக்குள் சமர்ப்பிக்குமாறும் தவறும் பட்சத்தில் இத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்ட முன்னாள் மாநகரசபை உறுப்பினருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |